ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 2.3 – ஊனில் வாழ்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.3 – ஊனில் வாழ்

‡ ஊனில் வாழ் உயிரே ⋆
நல்லை போ உன்னைப் பெற்று ⋆
வான் உளார் பெருமான் ⋆
மதுசூதன் என் அம்மான் ⋆
தானும் யானும் எல்லாம் ⋆
தன் உள்ளே கலந்தொழிந்தோம் ⋆
தேனும் பாலும் நெய்யும் ⋆
கன்னலும் அமுதும் ஒத்தே ‖ **2.3.1** ‖

ஒத்தார் மிக்காரை ⋆
இலை ஆய மா மாயா ⋆
ஒத்தாய் ⋆
எப்பொருட்கும் உயிர் ஆய் ⋆
என்னைப் பெற்ற அத்தா ஆய்த் தந்தை ஆய் ⋆
அறியாதன அறிவித்த ⋆
அத்தா நீ செய்தன ⋆
அடியேன் அறியேனே ‖ **2.3.2** ‖

அறியாக் காலத்துள்ளே ⋆
அடிமைக் கண் அன்பு செய்வித்து ⋆
அறியா மா மாயத்து ⋆
அடியேனை வைத்தாயால் ⋆
அறியாமைக் குறளாய் ⋆

நிலம் மாவலி மூவடி என்று ⋆
அறியாமை வஞ்சித்தாய் ⋆
எனதாவியுள் கலந்தே ॥ **2.3.3** ॥

எனதாவியுள் கலந்த ⋆
பெரு நல் உதவிக் கைம்மாறு ⋆
எனதாவி தந்தொழிந்தேன் ⋆
இனி மீள்வதென்பதுண்டே ⋆
எனதாவி ஆவியும் நீ ⋆
பொழில் ஏழும் உண்ட எந்தாய் ⋆
எனதாவியார் யான் ஆர் ⋆
தந்த நீ கொண்டாக்கினையே ॥ **2.3.4** ॥

இனி யார் ஞானங்களால் ⋆
எடுக்கல் எழாத எந்தாய் ⋆
கனிவார் வீட்டின்பமே ⋆
என் கடல் படா அமுதே ⋆
தனியேன் வாழ் முதலே ⋆
பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய் ⋆
நுனி ஆர் கோட்டில் வைத்தாய் ⋆
உன பாதம் சேர்ந்தேனே ॥ **2.3.5** ॥

சேர்ந்தார் தீ வினைகட்கு ⋆
அரு நஞ்சைத் திண் மதியை ⋆
தீர்ந்தார் தம் மனத்துப் ⋆
பிரியாதவர் உயிரை ⋆
சோர்ந்தே போகல் கொடாச் சுடரை ⋆
அரக்கியை மூக்கீர்ந்தாயை ⋆

அடியேன் அடைந்தேன் ⋆
முதல் முன்னமே ‖ **2.3.6** ‖

முன் நல் யாழ் பயில் நூல் ⋆
நரம்பின் முதிர் சுவையே ⋆
பன்னலார் பயிலும் ⋆
பரனே பவித்திரனே ⋆
கன்னலே அமுதே ⋆
கார் முகிலே என் கண்ணா ⋆
நின் அலால் இலேன் காண் ⋆
என்னை நீ குறிக்கொள்ளே ‖ **2.3.7** ‖

குறிக்கொள் ஞானங்களால் ⋆
எனை ஊழி செய் தவமும் ⋆
கிறிக் கொண்டிப் பிறப்பே ⋆
சில நாளில் எய்தினன் யான் ⋆
உறிக் கொண்ட வெண்ணெய் பால் ⋆
ஒளித்துண்ணும் அம்மான் பின் ⋆
நெறிக் கொண்ட நெஞ்சனாய்ப் ⋆
பிறவித் துயர் கடிந்தே ‖ **2.3.8** ‖

கடி வார் தண்ணம் துழாய் ⋆
கண்ணன் விண்ணவர் பெருமான் ⋆
படி வானம் இறந்த ⋆
பரமன் பவித்திரன் சீர் ⋆
செடியார் நோய்கள் கெடப் ⋆
படிந்து குடைந்தாடி ⋆

அடியேன் வாய் மடுத்துப் ⋆
பருகிக் களித்தேனே ॥ **2.3.9** ॥

களிப்பும் கவர்வும் அற்றுப் ⋆
பிறப்புப் பிணி மூப்பிறப்பற்று ⋆
ஒளிக் கொண்ட சோதியும் ஆய் ⋆
உடன் கூடுவதென்று கொலோ ⋆
துளிக்கின்ற வான் இந்நிலம் ⋆
சுடர் ஆழி சங்கேந்தி ⋆
அளிக்கின்ற மாயப் பிரான் ⋆
அடியார்கள் குழாங்களையே ॥ **2.3.10** ॥

‡ குழாம் கொள் பேர் அரக்கன் ⋆
குலம் வீய முனிந்தவனை ⋆
குழாம் கொள் தென் குருகூர்ச் ⋆
சடகோபன் தெரிந்துரைத்த ⋆
குழாம் கொள் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் உடன் பாடி ⋆
குழாங்கள் ஆய் அடியீர் உடன் ⋆
கூடி நின்றாடுமினே ॥ **2.3.11** ॥

அடிவரவு — ஊனில் ஒத்தார் அறியா எனதாவி இனியார் சேர்ந்தார் முன்நல் குறிக்கொள் கடிவார் களிப்பும் குழங்கொள் ஆடியாடி

ஊனில் வாழ் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்